# மலேசியாவில் தமிழர் குடியேற்றமும் தாய்மொழியின் நிலையும்

மு. பரமசிவம், புத்ரா பல்கலைக்கழகம்

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மலேசியாவிற்குப் புலம் பெயர்ந்த தமிழர் குறித்தும் அவர்தம் தாய் மொழியின் நிலை குறித்தும் குறிப்பாகத் தமிழ்ப்பள்ளியில் பயிலாது தொடக்க, இடைநிலை, உயர்நிலைக் கல்வியைத் தேசியமொழிப் பள்ளியில் பயின்று, பல்கலைக்கழகத் தமிழ் வகுப்புகளில் அடிப்படைத் தமிழ்க்கல்வி பெறும் மாணவர்களின் தமிழ்மொழித் திறன் குறித்தும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## புலப்பெயர்ச்சி

மலாயாவிற்கும் (1963 ஆம் ஆண்டிற்குப் பின் மலேசியா), பழந்தமிழ் நாட்டிற்கும் இடையிலான தொடர்பு மிக நீண்டதாகும். அத்தொடர்பு கி.மு. 500க்கு முந்தியதாகும் என்கின்றனர் வரலாற்றாசிரியர்கள் (ஹசயளயபசயவாயேஅ.ளு., 1970:191, 194). பழந்தமிழகமும் தென்கிழக்காசிய நாடுகளும் கொண்டிருந்த தொடர்பு குறித்தும் 'தமிழகம் தென்கிழக்காசிய நாடுகளோடு சங்க காலம் முதல் கொண்டிருந்த தொடர்பு பின்னர் பல்லவர் காலத்தில் (கி.பி. 575 – 846 ) மேம்பட்டது. பிற்காலச் சோழர் காலத்தில் (கி.பி. 846–1279) உச்ச நிலையடைந்தது, பிற்காலப் பாண்டியர் காலத்தில் (கி.பி. 1279 –1310 ) அது நீடித்தது. விஜய நகர ஆட்சிக் காலம் வரை (கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை) நிலைத்திருந்தது' என்று நூல்கள் எடுத்துரைக்கின்றன.

(நெடுமாறன், 1972:32).

மேற்படி தொடர்ச்சி, கால மாறுதல்களால் தொடர்பு விடுபட்டுப்போனது. இப்போது இங்கு வாழும் தமிழர் ஆங்கிலேயரால் (19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) குடியேற்றப்பட்டவர். குடியேற்ற வரலாறு மிக நீண்டதெனினும் மிகச் சுருக்கமாகக் கூறுவது கட்டுரையின் நோக்கத்திற்குப் பொருந்துவதாகும். காடுகளும் மலைகளுமாகவே காட்சியளித்த மலேசியா, வளம் நிறைந்த பூமியென்று 1786இல் மலாயாவைத் தன் வயமாக்கிக் கொள்ள ஆங்கிலேயர் எண்ணினர். காடுகளைக் களைந்து காப்பி, கொக்கோ, கரும்பு, ரப்பர், செம்பனைப் பயிரிடத் தாங்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்த இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து – குறிப்பாகத் தென்னகத்திலிருந்து – அதிலும் குறிப்பாகத் தமிழகத்திலிருந்து மிகுதியான தொழிலாளர்களை வரவழைத்தனர். அங்ஙனம் புலம் பெயர்ந்து வந்தோரின் கால் வழியினரே, இன்றைய மலேசியத் தமிழர்.

## வாழிடமும் தொழிலும்

தென்னிந்தியத் தொழிலாளர் ஆங்கிலேய முதலாளிகளாலும், அவர் தம் முகவர்களாலும் (ஹபநவே) பேராசை ஊட்டி, கற்பனையான சலுகைகளை வாயளவில் எடுத்துரைத்துக் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் ஆங்கிலேயர் ஆசை வார்த்தைகளுக்கு இணங்கி இங்குவர அந் நாட்டுச் சூழலும் ஒரு காரணமாய் இருந்தது. அங்கு நிலவிய வறுமை, ஆங்கிலேயர் ஆட்சியின் கெடுபிடி, சாதிக் கொடுமை தாழ்த்தப்பட்டவர்களை விலங்கினும் கீழாக நடத்திய அவலம், நிலப்பிரபுகளின் மிகக் கடுமையான நடவடிக்கைகள், அவர்களிடம் கடன் படவேண்டிய வறுமைநிலை, வட்டி செலுத்த முடியாத துன்பம், அதற்காகக் காலமெல்லாம் நிலப் பிரபுகளுக்கு அடிமையாகக் கிடக்க வேண்டிய துயர் மிகுந்த சூழல் போன்றவை, தென்னிந்தியரைப் புலம் பெயர வைத்தன (சு. இராசாராம், 1999:230).

## புலம் பெயர்ந்தோர் தகுதி

''எங்காவது போய்ப் பிழைத்துக் கொள்ளலாம்'' என்ற முடிவுக்கு வந்து, புலம் பெயரத்துணிந்த மக்களின் சமுதாயத் தகுதி பற்றிக் குறிப்பிடும் போது, நூலாசிரியர்கள் கூறும் கருத்துகளும் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கன. அன்று இங்கு வந்தவர்கள் படித்தவர்கள் அல்லர். உலக நிலவரங்கள் பற்றி அறிந்தவர்கள் அல்லர், வாழ்வின் அடிமட்டத்தைச் சார்ந்தவர்கள்; தாழ்த்தப்பட்டுக் கொடுமைகளுக்காளான வர்க்கத்தினர். அடக்கம், அச்சம், பணிவு, விசுவாசம், தன்னம்பிக்கையில்லாமை இவர்களின் குணங்களாய் இருந்தன (பி. இராமசாமி, 1999:21).

மேற்படி தன்மையினரே தமக்கு வேண்டுமென்று பிரிட்டிசார் எதிர்பார்த்தனர். அவர்கள் எதிர்பார்த்தற்கு மேலான தகுதியைத் தென்னிந்தியத் தொழிலாளர் கொண்டிருந்தனர். பெரும் எதிர்பார்ப்புகளோடு இங்கு வந்திறங்கிய தமிழர், இந்த மண்ணைக் கண்டதும் பேரதிர்ச்சிக்குள்ளாயினர். தரமற்ற குடியிருப்புகள், அச்சம் ஏற்படுத்தும் சுற்றுச் சூழல், தாக்குப் பிடிக்க முடியாத பணிச்சுமை, கடுமையான அடக்குமுறை, உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை. ஓய்வு ஒழிவின்றி உழைக்க வேண்டிய கொடுமை அவர்களை நிலை குலைய வைத்தன. இச்சூழல், தொழிலாளர் வாழ்வை இருள் மயமாக்கியது. இது குறித்து 'இயுச் டின்கர்' என்பவர் கூறியதைப் பி. இராமசாமி தம் நூலில் எடுத்துக் காட்டுகிறார். "நீக்ரோ அடிமைகளின் பிரதியாக இந்தப் புதிய அடிமை முறை தோன்றுகிறது. இதில் ஆப்பிரிக்கச் சகோதரர்களின் அடிமைக் கூறுகள் இந்தியர்களிடம் வெகுவாகத் தென்பட்டன '' (பி. இராமசாமி 1999: 20, 21).

மேலே குறிப்பிட்ட தன்மைகளோடு இங்கு வந்த தென்னிந்தியர் (85 சதவீதம் தமிழர்), இம் மண்கைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். தரமற்ற குடியிருப்புகள், இடர் ஏற்படுத்தும் சுற்றுச் சுழல்கள், தூய்மையற்ற குடிநீர், மலேரியா காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுக்கள், குருதி உரிஞ்சும் அட்டைகள் என, வாழ்வுச் சூழலே நரகமாயிருந்தது. இவற்றோடு அளவுக்கு மீறிய வேலைச் சுமை, ஓய்வு ஒழிவற்ற உழைப்பு, மேலதிகாரிகளின் கெடுபிடி. மன அழத்தத்தை ஏற்படுத்தும் நடிவடிக்கைகள் எனத் தொழிலாளர் வதை பட்டனர். வாழ்வு நிலை இத்தகையாதாய் இருந்த சூழலில், தமிழ்க் கல்வி தலைகாட்ட முடியுமா ?

## தமிழ் செழித்திருந்த மண்

இந்த மண்ணில் பழந்தமிழர் தொடர்ச்சி இல்லை எனினும், அன்று புழங்கிய தமிழ் இந்நாட்டு மொழியான மலாயில் கலந்து இன்றும் வாழ்ந்து கொண்டிருந்தது. தமிழ்ப்பண்பாடு மலாய்க்காரர் பண்பாட்டோடு கலந்து ஒளிர்கிறது என்பதனை மறந்து விட முடியாது. இது குறித்து முனைவர் முரசு. நெடுமாறன் கீழ்க்கானுமாறு கூறுகிறார். "தென்னாட்டார்க்கும் , மலாய்க்காரர்க்கும் இருந்து வந்த நீண்ட தொடர்பினால் நாகரிகமும் பண்பாடும் ஈண்டுப் பரவியதனைப் போல், மலாய்மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலந்தன; சமய வழிபாடுச் சொற்கள், அரசியல், ஆட்சித்துறைச் சொற்கள் கலந்து மலாய் மொழிச் சொற்கள் போலவே வடிவம் பெற்றன; சில சொற்களின் பொருளும் தேவைக்கேற்ப மாற்றம் பெற்றன'' எங்கிறார் (முரசு. நெடுமாறன், 1997: 45)

இந்நாட்டின் இடப்பெயர்கள் சிலவும் தமிழாக உள்ளன. "மலாக்கா'' என்பது தமிழ்ச்சொல் என்பது குறித்துச் ச. சிங்காரவேலு இங்ஙனம் கூறுகிறார். "மலாக்கா '' என்பது தமிழ்ச் சொல் ஆகும். ஆமலக்காய் என்றால் நெல்லிக்காய். முன்னுள்ள ஆகெட்டு மலாக்கா என்று ஆனது. இதனை "மரூஉ'' என்பர் (ச. சிங்காரவேலு 1989, 27)

மேலும் மலேசிய மாவீரன் ஹங்துவா காலத்தில் இங்குத் தமிழ் செழித்திருந்ததையும், அவ்வீரன் கிருஷ்ணதேவராயருடன் சரளாமாகத் தமிழில் பேசியதையும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. (முயளைஅ ஹாஅயன, 1968:339). பழம் பெருமைகள் இங்ஙனம் இருந்தன எனினும், அவை நிகழ்காலத்திற்கு உதவ முடியுமா ? தமிழை ஆங்கிலேயர்கள் மதிப்புக் குறைந்தவர் பேசும் மொழியாகப் புறக்கணித்தனர். எனினும் மணலில் கயிறு திரிக்க முயன்றது போல் இங்குத் தொடக்கத்தில் வாய்ப்புகள் ஏற்படுத்தும் முயற்சிகள் அரும்பின. 1816ல் பினாங்கு இலவசப் (ஞநயேபே குசநந ளுஉாடிடட)பள்ளியில் கிறித்துவ சமயத்தினரால் தமிழ வகுப்பு ஏற்பட்டது. (கூ. ஆயசஅைரவார, 1987:3) ஆனால் பிரிட்டிஷ் அரசு, தாய்மொழிப் பள்ளிகளை (தமிழ், சீனம்) ஏற்படுத்துவது தன் கடமையன்று என்று அதனில் கருத்துச் செலுத்தாது இருந்து வந்தது. காலப் போக்கில் சமய நிறுவனங்கள், தனியார் முயற்சிகள், தோட்ட நிருவாகங்கள் தமிழ்ப் பள்ளிகள் தோன்ற வழி வகுத்தன. தோட்ட நிருவாகத்தினர் தமிழ்ப் பள்ளிகள் ஏற்படுத்த முன் வந்ததன் நோக்கம், தொழிளாளர் கவனத்தை ஈர்த்து அவர்களை அங்கேயே நிலைப்படுத்த மேற்கொண்டதாகும்.

இரண்டாம் உலகப் போர்க்காலத்திற்கு முன்பு வரை இங்குத் தமிழர் வாழ்வும் , தமிழ்ப்பள்ளிகளின் நிலையும்

தரமுடையனவாய் இல்லை. அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில்லாமல் தமிழ்ப்பள்ளிகள் நிலையும் தரமுயைனவாய் இல்லை. அரசாங்கத்தின் நேரடிக் கண்கானிப்பில்லமல் தமிழ்ப்பள்ளிகள் இருள் சூழ்ந்து கிடந்தன; தமிழர் வாழ்வும் அங்ஙனமே. ஜப்பானியர் நாட்டைக் காப்பாற்றி

ஆங்கிலேயரை ஓர் உலுக்கு உலுக்கினர். 1941ல் ஜப்பானியரிடம் ஆட்சியை இழந்து 1945ல் மீண்டும் கைப்பற்றிபின் பிரிட்டிசாரின் போக்கு மாறியது. மக்களிடமும் விழிப்புணர்ச்சி மேலோங்கியது. தொழிற்சங்க, சமுதாய கலை, இலக்கிய இயக்கங்கள் தோன்றின. இதழ்கள் எழுச்சியைத் தூண்டின. 85 விழுக்காட்டிற்கு மேல் தோட்டப்புறத்தில் வாழ்ந்த தமிழர் வாழ்வு படிப்படியாக சிறப்புற்றது. கல்வியும் மேலோங்கியது. இன்று தமிழர் வாழ்வு வளர்ச்சியை நோக்கித் தகவல் தொழில் நுட்பப் பின்னணியோடு முன்னேறி வருகிறது.

இங்ஙனம் சமுதாய வாழ்வு உயர்ந்து வரும் நிலையோடு தமிழ் மொழி வளர்ச்சியும் நோக்கத்தக்கதாகும். மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளமாகும். அது நிலைபெற்றால்தான் இனப்பெயர் நிலைக்கும். இந்த உண்மையை உணர்ந்த காரணத்தால் சமுதாயத் தலைவர்கள் தாய்மொழிப் பற்றைத் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்த வந்தனர். குறிப்பாக தமிழ் உணர்வும் சமுதாய உயர்வில் நாட்டமும் கொண்ட தலைவர் கோ. சாரங்கபாணி இவ்வகையில் ஆற்றிய தொண்டுகள் வரலாற்றில் என்றென்றும் நிலைக்கத் தக்கன. அவர் வழிகாட்டலில் உருவான தலைமுறையின்ரும் மொழி, கலை, இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் கொண்டவராவார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் தமிழ்க் கல்விக்குப் புத்துயிர் ஏற்பட்டது. பட்டணத்தில் வாழ்ந்த பிள்ளைகளில் பலர் ஆங்கில, தேசிய மொழிப் பள்ளிகளுக்குச் சென்றனர். எனினும் தோட்டப்புறப் பெற்றோர் தமிழ்ப் பள்ளிக்கே தங்கள் பிள்ளைகளை அனுப்பினர்; சூழலும் அங்ஙனமே அமைந்திருந்தது. தோட்டப்புறப் பள்ளிகளையும் பட்டணப்புறப் பள்ளிகளையும் சேர்த்து அன்று 800க்கு மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் இருந்தன. அவை பல்வேறு காரணங்களால் குறைந்தன. இன்று 524 தமிப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் சமுதாயத்தின் 50 விழக்காட்டு மாணவர் பயில்கின்றனர். தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் பல்கலைக்கழகம் வரை கல்வியைத் தொடர்ந்து மேன்மையுற்று வருகின்றனர்.

இப்பொழுது தமிழ்ப்பள்ளிகளுக்கு செல்லும் மாணவர் தொகை படிப்படியாய் அதிகரித்து வருகிறது. சமுதாயத்தில் தமிழ்ப்பள்ளிகளின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இவ்வாண்டில் 17ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழ்ப்பள்ளிகளில் சேர்ந்ததாக நாளிதழ்களின் வழி அறியமுடிகிறது. இந்த மேம்பாட்டிற்கு ம.இ.கா வழி, டத்தோஸ்ரீ ச.சாமிவேலு மேற்கொண்ட வரும் திட்டமிட்ட உறுதியான நடவடிக்கைகளும் முக்கிய காரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதுள்ள சிக்கலெல்லாம் தமிழ்ப்பள்ளிகளில் பயில மாணவர்களுக்கு இடமில்லை என்பதுதான். இச் சிக்கல் தீர்ந்தால், கட்டட வசதிகளோடு பிற வசதிகளும் கூடினால் மேலும் உயர்ந்த நிலையைத் தமிழ்ப்பள்ளிகள் எட்ட முடியும்.

தமிழ்ப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் 6 ஆம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு (கணிதம், அறிவியல் தவிர) பயில்வர். தொடர்ந்து இடைநிலைப் பள்ளிகளிலும் தமிழை ஒரு விருப்பப் பாடமாகப் பயில்வர்; மலாயாப் பல்கலைக்கழகத்தில் இடம் கிட்டும் மாணவர்கள் தமிழை ஒரு சிறப்புப் பாடமாகக் கொண்ட பயின்று பட்டம் பெறுவர். ஆனால் தேசிய மொழிப் பள்ளிகளுக்குச் செல்வோர் நிலைவேறு.

தேசிய பள்ளியிலோ, சீனப்பள்ளியிலோ (சிறுபான்மை) பயிலும் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் பயில வாய்ப்பில்லை. தாய்மொழிப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று விதியிருந்தாலும் அது சரியான முறையில் வாய்க்கவில்லை. பெற்றோரின் முயற்சி இன்மை, பள்ளி நிறுவாகங்களின் அலட்சியப் போக்கு போன்ற பல காரணங்களால் அங்குத் தமிழ்க் கல்வி காலூன்றவில்லை. அண்மைக் காலத்தில் அதன் மேம்பாட்டில் அரசு கருத்துச் செலுத்தி வருகிறது.

இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் விருப்பப் பாடங்களில் ஒன்றாக உள்ளது எனினும் அனைத்துத் தமிழ் மாணவர்களும் அவ்வகுப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. தமிழ்ப்பள்ளியிலிருந்து வந்த – ஆர்வம் உடைய மாணவர்கள் மட்டுமே அதனால் பயன் அடைகிறார்கள்.

## பல்கலைக் கழகங்களில்

பல்கலைக்கழகங்களில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே தமிழ்த்துறை அமைந்துள்ளது. மற்றப் பல்கலைக் கழகங்களுள் மலேசிய புத்ரா பல்கலைக்கழகம் (ருஞஆ), பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (ருளஆ), மலேசிய சபா பல்கலைக்கழகம் (ருஆளு) ஆகியவற்றில் மட்டுமே அடிப்படைத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தமிழ் கற்க விரும்புவோர்,

மற்றப் பாடங்களுக்கு இடையூறில்லாத சூழல் அமைந்தால் அவ் வகுப்பிற்குச் செல்வர். அவர்களின் தாய் மொழித்திறன் பலதரப்பட்டவையாகும்.

தமிழ்க் கல்வியை இளமையிலிருந்து பெறாத மாணவர்களின் மொழித் திறனைப் பலவாறாகப் பகுக்கலாம். அவர்கள் குடும்பப் பின்னனிக்கேற்ப அது அமைந்திருக்கும். தமிழர் இங்கு குடியேறிய காலத்தில் இருந்த பேச்சுமொழி பல்வேறு மாறுதல்களை இடைக்காலத்தில் பெற்றுள்ளது. இது குறித்து ஆராய்ந்து நூல் எழுதியுள்ள முரசு, நெடுமாறனை நேர்கண்ட போது (14.01.2006) கூறிய செய்தி கீழே குறிக்கப் பெறுகிறது. (நேர்கண்ட நாள்: 23–3–2005).

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்குக் குடியேறியவர் ஆங்கில, மலாய் கலக்காத நல்ல தமிழே பேசினர். தமிழகக் கிராமம் போன்று அமைந்திருந்த (தமிழை மட்டுமே கொண்டிருந்த) தோட்டப் புறங்களில் வாழ்ந்த போது அனைவரும் கலப்பற்ற தமிழே பேசினர். அதற்கு நாட்டுப்புறப் பாடல்கள் சான்று பகர்கின்றன. கால மாற்றத்திற் கேற்ப – பல்லினம் கலந்து வாழும் சூழலுக் கேற்பப் பேச்சு மொழி மாறுதலடைந்தது. இடைக்காலத்தில் ஓரளவே நிகழ்ந்த கலப்பு இப்போது பேரளவு மிகுந்து விட்டது. இதற்கு ஊடகங்களும் காரணமாய் உள்ளன. சில குடும்பங்களில் தமிழ் பேசுவரை அறவே தவிர்த்து, ஆங்கிலத்தைத் தத்தெடுத்துக் கொண்ட நிலையும் உள்ளது."

முரசு. நெடுமாறன் விரிவாகக் கூறிய செய்திகளின் சுருக்கம் மேலே தரப்பட்டிருக்கிறது. அன்னா கூற்றுப்படி நாட்டுப்புறப் பாடல்களில் பழைய பேச்சு நடையை உணரமுடிகிறது.

"காலையிலே எழுந்து
"காண்டா" வாளி தூக்கணும்
கடுமையான (நா) நுறு மரத்தை
நாங்க வெட்டணும்
உழைப்பாளியா நாங்க இருந்து
ஓடத் தேயணும்
உழைக்கும் மக்கள் நாங்க
வறுமை யால வாடணும்
இட்டவேலைய நாங்களே
எடுத்துக்கூறிச் செய்யணும்
செய்யாவிட்டால் பின் முதுகில்
பிடரி பிடித்துத் தள்ளுவார்
ஏனென்று கேட்க நாதியில்லே
மாதம் முடிஞ்சி சம்ளத்த
குறையுதுன்னு கேட்டுப் பார்த்தா
கேட்டு விட்டா போதுமிந்த
எகிரு றாரே கிராம மணியாரும்"
(இரா. தண்டயுதம் 1998: 26)

இப்பாடலில் "காண்டா" என்ற சொல்லைத் தவிர மற்ற எல்லாச் சொற்களும் தமிழ் சொற்களே. காண்டா என்பது, பக்கத்துக்கு ஒரு வாளியாக இருவாளிகளை மாட்டித் தூக்கிச் செல்லும் தடி.

மேற்படி பாடல் பழைய பேச்சு நடையை உள்ளவாறு எடுத்துக் கூறுகிறது. அன்றைய சமுதாயத்தில் அனைவரும் இங்னம் மலாய், ஆங்கிலக் கலப்பற்ற தமிழே பேசினர். ஆனால் கால மாறுதல்களால் இப்போது பேச்சு மொழி பல மாறுதல்களைப் பெற்று விட்டது.

## பேச்சுத் தமிழ் வகைகள்

தமிழ்ப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களின் பேச்சுத் தமிழ், தேசியப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களின் பேச்சுத் தமிழ் எனப் பொதுவாக இருகூறாகப் பகுத்தாலும், தேசியப் பள்ளிக்குச் செல்லுவோரின் பேச்சு மொழியை மேலும் பல கூறுகளாகப் பகுக்கலாம்.

1. சரளமாகத் தமிழ் பேசுவோர் குடும்பங்களிலிருந்து வருவோர்

2. ஓரளவு தமிழ்ப் புழக்கம் உள்ள குடும்பங்களிலிருந்து வருவோர்

3. தமிழ்ப் புழக்கமே இல்லாத – ஆங்கிலத்தை தத்தெடுத்துக் கொண்டே குடும்பங்களிலிருந்து வருவோர்.

மேற்படி மூவகையினரும் இணைந்து பயிலவரும் வகுப்பே, 'Bahasa Asing' என்ற பெயரில் நடக்கும் அடிப்படைத் தமிழ் வகுப்பாகும். இவ்வகுப்புகள், மாணவர்களைத் தமிழ் மொழியில் புலமைபெறச் செய்யும் நோக்கம் கொண்டவை அல்ல; தமிழை ஓரளவு படிக்கவும் எழுதவும் கற்பிக்கும் வகுப்புகளாகும்.

இவ்வகுப்புகளில் கலந்து கொள்ளும் பலதரப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கிலம், மலாய் மொழி உதவியின்றித் தமிழ் பயிற்ற இயலாது. மலாய், சீன மாணவர்களுடன் இவ்வகுப்பில் இந்திய மாணவரும் சேர்ந்து பயில்வர். இவர்களுக்குத் தமிழில் இடும் கட்டளைகளைப் புரிந்து கொள்ளவோ, விளக்கங்களை உணர்ந்து கொள்ளவோ இயலாது. வினாக்களுக்கு அவர்கள் கருதும் விடைகளைக் கூறவோ, எழுதவோ இயலாது.'Bahasa Asing' என்ற பெயரில் நடத்தப் பெறும் வகுப்புகளின் மூன்று நிலைகளிலும் (Level 1,2,3) தவறாது கலந்து முயற்சியோடு பயில்வோர் ஓரளவு தமிழைப் பேசவும் எழுதவும் முடியும்.

இவ்வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் தமிழ்ப்புழக்கம் உள்ள குடும்பப் பின்னணி கொண்ட மாணவர்கள் விரைந்து திறங்களை வளர்த்துக் கொள்கின்றனர். ஆங்கிலம் புழக்கம் உடைய குடும்பத்து மாணவர்கள் ஓரளவு எழுதும் திறன் பெறும் அளவு, சரளமாகப் பேசும் திறன் பெற இயலாது போகிறது. எனினும், தமிழ் இனம், கலை, பண்பாடு குறித்த பயனுடைய செய்திகளை இவர்கள் ஓரளவு உணர அவ்வகுப்புகள் துணை புரிகின்றன.

வகுப்புகளில் பெறும் திறன்களை வளர்த்துக் கொள்ளப் பல்கலைக்கழகங்களில் ஓரளவு வாய்ப்புகள் உள்ளன. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டால் மொழி, சமய அமைப்புகளின் நடவடிக்கைகள், மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டுத் திறன்களைப் பெருக்கிக் கொள்ள வழிவகுக்க முடியும், பயனுடைய சமய, கலை விழாக்கள் வழி இனப் பின்னனியைப் புரிந்து கொள்ள முடியும்.

## தமிழுக்குள்ள வாய்ப்பு

இன்று ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் மலேசியத் தமிழர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவராவார். ஏனெனில் இங்குதான் பயிற்று மொழியைத் தமிழாய்க் கொண்ட (தொடக்கப்) பள்ளிகள் உள்ளன. பட்டக் கல்விவரை தமிழ் பயில வாய்ப்பும் இங்கு உள்ளது. இங்குச் சமுதாயத்தில் தமிழ், பேச்சு மொழியாகத் தொடர்ந்து விளங்கி வருகின்றது. தமிழ் பேசாத குடும்பத்தினர் கூட புரிந்து கொள்ளும் அளவு பேச்சு மொழியின் ஆட்சி வலுவாக உள்ளது.

## ஊடகங்கள்

பேச்சுமொழி பரவலாக எல்லாருக்கும் வாய்க்க, வானொலி, தொலைக்காட்சி, கணினி போன்ற சாதனங்கள் பெருந்துணை புரிகின்றன. அவை தமிழை ஒவ்வோர் இல்லத்தும் ஒலிக்கச் செய்கின்றன. குறிப்பாகத் தமிழர் விரும்பிப் பார்க்கும் திரைப்படம், சின்னத்திரைப்படம் போன்றவை பேச்சுமொழி நிலைப்பாட்டிற்கு உதவுகின்றன. தமிழகத்திலிருந்து அஞ்சல் செய்யப்படும் பல நிகழ்வுகளோடு உள்ளூர் நிகழ்வுகள் சிலவும் இயல்பான மலேசியத் தமிழ்ப் பேச்சு மொழியில் விரும்பத் தகாத மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்று தமிழ் உணர்வாளர்கள் வருந்தும் நிலை உள்ளது. எனினும், சமுதாயத்தில் விழிப்புணர்வு ஓங்கினால்அந்நிலை மாறலாம். குறைநிறைகளை ஆராயும் போது ஊடகங்கள் தமிழ்ப் பரவலுக்குப் பெருந்துணை புரிந்து வருகின்றன என்பதனை மறந்துவிட முடியாது.

## கணினியின் தாக்கம்

கணினியில் தமிழ் ஆட்சி புரிவதால் உலகளவு அதன் புத்தாக்கங்கள் பேச்சுத் தமிழோடு, எழுத்துத் தமிழ் வளர்ச்சிக்கும் பெரும் துணை புரிந்து வருகின்றன. உலகெங்குமுள்ள தமிழ்ப் படைப்புகளை அது வீட்டிற்கே கொண்டு வந்து தருகின்றது.

## எதிர்காலம்

தமிழர் வாழ்வு தொடக்கக் காலத்தில் இருந்ததை விட இரண்டாம் போர்க்காலத்திற்குப் பின் மேம்பாடடையத் தொடங்கியது. விடுதலைக்குப்பின் ஏற்பட்ட நெருக்கடிகள் பொருளாதாரச் சிந்தனை ஏற்பட வழி வகுத்தன. நாட்டு மேம்பாட்டுத் திட்டங்கள் வளர்ச்சி, மேம்பாடு சமுதாயத்தில் மாறுதல்களையும், உந்துதல்களையும் ஏற்படுத்தின. கல்வியில் நாட்டம் மிகுந்தது. தகவல் தொழில் நுட்பத் துறையில் இளைஞர்கள் ஈடுபாடு மிகுந்தது. இந்த வளர்ச்சிகளோடு, மொழி, கலை, இலக்கிய வளர்ச்சிகளும் ஓங்கி வருகின்றன. எதிர்காலத்தில் சொந்த அடையாளங்களை இழக்காத ஓர் இனமாகத் தமிழினம் மேம்படும் என்னும் நம்பிக்கைவோ் உறுதியாகவே உள்ளது.

## துணை நூல்கள் (தமிழ்)


இராசாராம், சு. (1991). *மொரீசியஸ் தமிழரும் தமிழும்*, தஞ்சாவூர்
தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்.

முரசு, நெடுமாறன் (1997). *மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்*. கிள்ளான்,
அருள்மதியம் பதிப்பகம்.

தண்டாயுதம், இரா. (1998). *மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள்*. சென்னை:
கோலாலம்பூர், மனோ பதிப்பகம்.

இராமசாமி, பி. (1999). *மலேசியத்தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும்*,
கோலாலம்பூர்: செம்பருத்தி பதிப்பகம்.


## துணை நூல்கள் (பிறமொழி)


Kasim Ahmad, (1968). **Hikayat Hang Tuah.** Kuala Lumpur
Dewan Bahasa dan Pustaka

Marimuthu, T. (1987) . **Tamil Schools Probelum and Prospects**,
Kuala Lumpur. EWRF Malaysia,

Singaravelu, S. (1989), " **Hubungan antara Kaun India dengan Negeri Melaka** "
**Esei -esei Bndaya dan Sejarah Melaka.** Kuala Lumpur.